RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# காலந்தோறும் பெண் - பெண் புனைவுகளைக் கட்டுடைத்தல்

ம. சோனியா [அ] *

[அ] தமிழ்த்துறை, மாநிலக்கல்லூரி, சென்னை -05, தமிழ்நாடு, இந்தியா,

# Deconstructing Representations of Women in Rajam Krishnan's Kālanthorum Pen

**M. Soniya [a, *]**

[a] Department of Tamil, Presidency College, Chennai-05, Tamil Nadu, India

*Corresponding Author:
msoniya118@gmail.com

Received: 06-12-2025
Revised: 27-02-2026
Accepted: 11-03-2026
Published: 17-03-2026

Check for updates

## ABSTRACT

Feminism has emerged as one of the most influential intellectual and social discourses in the contemporary world, advocating equality, justice, and the dismantling of patriarchal structures that have historically marginalized women. By challenging long-standing stereotypes and oppressive social constructs, feminist thought seeks to empower women through education, writing, social activism, and equal participation in all spheres of life. It emphasizes that women should enjoy the same rights, opportunities, and dignity as men while encouraging society to eliminate gender-based discrimination and patriarchal attitudes. In this context, Rajam Krishnan critically examines the historical and cultural construction of womanhood in her non-fiction work *Kālanthorum Peṇ* (Women Through the Ages). Through a thoughtful analysis of the beliefs, customs, and social practices that have shaped women's lives across generations, she questions traditional perceptions of the "ideal woman" and exposes the mechanisms through which patriarchal ideologies have been sustained. Her work advocates the re-evaluation of inherited norms and promotes a more equitable understanding of women's identity and social roles. The series of essays originally published in the magazine *Ilatchiya Pen* presents a powerful critique of conventional notions of femininity and calls for a transformation in the way women are perceived and treated in society. By foregrounding women's experiences, rights, and aspirations, Rajam Krishnan advances a progressive feminist vision that challenges established social structures and inspires critical reflection on gender equality. This article examines the deconstruction of traditional representations of women in *Kālanthorum Peṇ*, analyzing how Rajam Krishnan interrogates patriarchal ideologies and reconstructs a new discourse on women's identity, autonomy, and empowerment. The study highlights the work's significance as an important contribution to Tamil feminist thought and its continuing relevance to contemporary discussions on gender justice and social transformation.

**Keywords:** Feminism, Immutable Identities, Recovery, Feminist Uprising.

## முன்னுரை

இன்றைய உலகில் பேசப்பட்டு வரும் பெரும்வழக்காறுகளான கருத்தாடல்களில் ஒன்று பெண்ணியம். பெண்களைக் காலங்காலமாக கட்டுப்படுத்தி வைத்திருக்கும் கற்பிதங்களை உடைத்தெறிந்து, எழுதுவதும் போராடுவதும் பெண்ணினத்தின் முக்கியத்துவங்களாக விளங்குகின்றன. மேலும், பெண்கள் சம உரிமையுடன் வாழவேண்டும் என்பதற்காகவும் அவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்னும் நோக்குடனும் சமூகத்தின் கட்டுப்பாடுகளையும் ஆணாதிக்க மனப்பான்மையையும் நீக்கி கல்வி,வேலை, அரசியல் எனப் பல்துறைகளிலும் ஆண்களுக்கு இணையாக பெண்கள் பங்களிக்க வேண்டும் என்பதனையும் இலக்காகக் கொண்டு பெண்களுக்காகப் போராடும்

பெண் எழுத்தாளர்களின் குரல்கள் ஓங்கி ஒலித்த வண்ணம் இருக்கின்றன. இவ்வாறு மரபுவழி பின்பற்றப்பட்டு வந்த பெண் பற்றியச் சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகளை அலசி ஆராய்ந்து இராஜம் கிருஷ்ணன் 'காலந்தோறும் பெண்' என்ற அபுனைவை அளித்திருக்கிறார். 'இலட்சியப் பெண்' இதழில் வெளிவந்துள்ள இக்கட்டுரைத் தொடரில் பெண் குறித்த அவதானிப்புகளை முன்வைத்து ஒரு புரட்சியையே மேற்கொண்டிருக்கிறார். அப்புரட்சியினைக் குறித்த ஆராய்வாய் அமைகிறது இக்கட்டுரை.

## தொடக்க கால நகர்வும் படைப்புகளும்

இராஜம் கிருஷ்ணன் திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறியில் பிறந்தவர்.பள்ளிக்குச் சென்று முறையே கல்விபயிலாத இவர், துணைவரின் உதவியால் பல புத்தகங்களைப் படித்து பல கதைகளை எழுத ஆரம்பித்தார். களப்போராளியாகச் செயல்பட்ட இவர் படைப்புக்காக நேரில் சென்று பல உண்மை நிலைகளை அங்கு வாழும் மக்களோடு பழகி, ஆராய்ந்து பெண்கள் குறித்த முன்னேற்றத்தையும் இலட்சியத்தையும் தம் புனைவின் வழி கொண்டு வந்தவர். உப்பளத் தொழிலாளர்கள் வாழ்வை பதிவு செய்யும் 'கரிப்புமணிகள்', 'முள்ளும்மலரும்', 'குறிஞ்சித்தேன்', 'கூட்டுக்குஞ்சுகள்', 'கோடுகளும் கோலங்களும்', 'உத்தரகாண்டம்', 'சத்திய வேள்வி', 'சேற்றில் மனிதர்கள்', முதலிய ஆகச்சிறந்த இவர்தம் படைப்புகளும் குறிப்பிடத்தக்கன.

## அணுகுமுறைகள்

இலக்கியத்தைப் பரந்த ஒரு சமூகப் பிண்ணனியில் வைத்து ஆராயும் ஆய்வு முறையில் இலக்கியப் படைப்புகள் சமூகச்செயற்பாடுகளைப் பிரதிபலித்து நிற்கின்றன. இந்நூலில் சமூகத்தில் பெண்களுக்கான இருப்பு நிலையை சமூகவியல் திறனாய்வு அடிப்படையில் ஆய்ந்தளித்திருக்கிறார். இதனைப் போன்று "பெண்ணிய இலக்கியத் திறனாய்வு பல்துறை அணுகுமுறைகளுள் ஒன்றாக விளங்குகிறது. இது பாலினம் அடிப்படையாகக் கொண்டு இலக்கிய அனுபவத்தை ஆய முற்படுகிறது."[1] என்னும் பாண்மையில் பெண்ணிய அணுகுமுறையில் இந்நூலின்கண் உள்ள கட்டுரைகள் ஆராயப்பட்டுள்ளன. மேலும் திருவள்ளுவர் அணுகியிருக்கும் பெண் குறித்த கருத்துகளில் தனக்கிருக்கும் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி, மறுக்கும் இடத்தில் ஓர் ஒப்பியல் ஆய்வு முறையையும் கைக்கொண்டிருக்கிறார்.

## மாறா நிலையின் புலப்பாடு

காலம்தோறும் பெண்கள் குலமகள், விலைமகள் என்ற இரு நிலைகளில் பார்க்கப்படுகின்றனர். நெறிதவறாதவளாக தெய்வமாக போற்றப்படுகின்ற பெண்களை கற்பென்னும் ஒற்றைச் சிறைக்குள் பூட்டிவைக்கும் கொடூர முறையைக் காத்திரமாக விளக்குகிறார். கற்புநெறியின் கூரிய வாள்முனையில் தொங்கிக் கொண்டிருக்கும் பெண்களின் மன உளைச்சலை கட்டுரையில் பல இடங்களில் பதிவிடுகிறார். பெண் என்கின்ற விதத்தில் அவள்மீது திணிக்கப்படும் அடக்குமுறை வடிவங்கள் ஏராளம். சமூகத்தில் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்ற வகையில், பெண்கள் மீது ஏற்றப்படும் கற்பு என்னும் ஒளி குன்றாமல் இருக்க அவள் போராடும் விதத்தை ஒவ்வொரு இடத்திலும் காட்டுவதுடனும் மேலும் பெண்ணை போகப்பொருளாக கருதும் ஆண்களின் அதிகாரத்தை, அதாவது தந்தை வழி ஆதிக்கம் தலைதூக்கிய காலத்தில் பெண்கள் நிலை வீழ்ச்சியுறத் தொடங்கிவிட்ட நிலையையும் சுட்டுகிறார். 'உலக வரலாற்றில் பெண்கள்' (The Women's History Of The World) என்னும் நூலில் ரோஸலிண்ட் மைல்ஸ், மனித குல வரலாறு முழுவதும் பெண் உடல்மீது ஆண் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட நடத்திய நெடிய வரலாறாகவே அமைந்திருக்கிறது. இம்மாறா நிலையையும் ஆண்களின் மேட்டிமைத்தனத்தையும் இந்நூலில் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்.

## திருமணமுறை நீட்சியும் வரதட்சணைக் கொடுமையும்

பெண்களின் திருமணமுறை குறித்துத் தீவிரமான கேள்விகளுடன் அணுகியிருக்கிறார். பழங்குடிக் குழுக்களுக்குள் நடக்கும் திருமணத்தொடர்புகள், திருமணத்திற்காக வேலையை விட்டுத் தியாகிகள் ஆகும் பெண்கள், மேலும் திருமணம் புரியும் பெண்கள் பலருக்கும் வகுக்கும் இலக்கணத்தை மறுத்திருக்கிறார். "திருமண அமைப்புக்குள் பெண்ணிற்குச் சமுதாயத்தால் பாதுகாப்பு கிட்டியது. ஆனால், இந்த அமைப்பில் தமிழ்ச் சமுதாயத்தில் பெண் ஆணைப் பொறுத்த மட்டில் அளவீட்டில்லா உண்மைநிலையையும் அதன் தொடர்பாகச் சில கட்டுப்பாடுகளையும் கடப்பாடுகளையும் கொண்டு விளங்க வேண்டியவளானாள்."[2] இந்நூலில் பெண்களுக்கு விதிக்கப்படும் விதிமுறைகளை களைத்தெறியப் போராடியிருக்கிறார். சீனத் திருமணமுறை, வேதங்கள் உரைக்கும் முறை, தொல்காப்பியம் காட்டும் எண்வகை கரணங்கள் என அனைத்தையும் நுட்பமான முறையில் விவரித்திருக்கிறார். பெண்கள் குறித்த திருமண முறைகளையும் அதனின் நீட்சியாக வெளிப்படும்

பல்வேறு சடங்கு முறைகளையும் விவரிக்கிறார். "தாய்- தந்தை உறவு முறையில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையில் வற்புறுத்தப்பட்டன. அத்துடன் ஒரு குழுவின் ஒரு இனத்தின் தொடர்ச்சி விடுபடாதிருக்கவும், இனக்கலப்பு ஏற்படாதிருக்கவும் வேண்டி, திருமணக் கட்டுப்பாடுகள் உருவாயின."3 அத்திருமணத்தின் தொடர்ச்சியாக உருவான கட்டுப்பாடுகளான தாலிகட்டுதல் வழக்கம், குங்குமத்தீற்றல் முதலிய அடையாளங்களைப் புறக்கணித்துப் பேசியிருக்கிறார். 'தாலி கட்டுதல்' வழக்கம் முகம்மதியர் ஆதிக்கம் பெற்றதன் விளைவாக ஏற்பட்டது என்ற கருத்து வரலாற்றறிஞர்களிடையே நிலவும் நிலை குறித்தும், பெண் தானத்துடன் அளிக்கும் 'வரதட்சணை' என்ற பொதியைக் கொடுக்கும் வழக்கத்தையும் பதிவு செய்கிறார். இன்றைய பெண்களுக்கு வரதட்சணை கொடுத்து பெண்ணை விலைக்கு வாங்கும் அவல நிலை குறித்து அன்றே தம் எழுத்தின் வழி குரல்கொடுத்திருக்கிறார். 'ஒடுக்கல் சாத்திரத்தின் ஒப்பனைக் கருவிகள் 'என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் மஞ்சள், குங்குமத்தீற்றல் முதலிய ஒப்பனைப் பொருட்கள் அடையாளங்களாக இழிநிலையையும் இந்நாட்களில் மாறிப்போன சூழலையும் எடுத்துக்காட்டுகிறார்.

## ஒடுக்குதலும் விலக்குதலும்

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்னும் தேய்வழக்காறுக்கேற்பப் பெண்களை அடுக்களைச் சேவகிகளாக ஒடுக்கி வைத்திருந்த சமுதாயத்தைச் சாடி, பாரதியார் முதலிய மாமேதைகள் 'எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்ற வாதத்தை முன்வைத்து, ஆண்களும் பெண்களும் 'சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் ' 'நிமிர்ந்த நன்னடையும் திமிர்ந்த ஞானச்செருக்கும் கொண்ட புதுமைப் பெண்களாக உருவாக வேண்டும்' என்பன போன்ற கருத்துகளை வலியுறுத்தி, பெண் கல்வியின் விடுதலைக்காக அறைக்கூவலிட்டனர். இதே போன்றே படைப்பாளரும் பெண்கல்வி குறித்துக் காலம்தோறும் பேசப்பட்டு வரும் கற்பிதங்களை உடைத்தெறிந்து பேசியிருக்கிறார். பெண்கல்வி குறித்து பலபேர் குரல் கொடுத்திருந்தாலும் சமூகத்தில் இன்றளவும் மாறாத மனோபாவங்களுக்காக வருந்துகிறார். பெண்கல்வியின் இன்றைய நோக்கமானது பொருளீட்டுதல் என்ற வகையில் மாறிப்போனது. அடிமைச் சந்தையில் பெண்கள் அடிமைகளாக அதிகம் விற்பனைக்குரியவர்களாக இருக்கும் அவல நிலையைக் காட்டியிருக்கிறார். ஆயினும் நூலில் ருக் வேத காலத்தில், பெண்களுக்கான கல்வி மிக உயரிய நிலையில் கட்டாயப்படுத்தப்பட்ட முறையைக் கூறுவதன் மூலம் வேத காலத்தின் அடியாழம்வரை சென்று அணுகியிருப்பதை உணரமுடிகிறது. திருமணமே பெண்கல்விக்கு முக்கியத் தடைக்கல்லாக மாறிப்போன சூழலையும் உணரமுடிகிறது.

## உரிமைகளின் கட்டமைப்பு விதி

தாயை விடவும் குழந்தையின் எல்லா உரிமைகளிலும் தகப்பனே முன்னுரிமை பெற்றவன் என்ற விதிக்கட்டமைப்பைக் காட்டுகிறார். "இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில், இந்தியத் துணைக்கண்டம் கல்வி வளர்ச்சிப் படிநிலைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருப்பினும், பெண்கள் சம்மந்தப்பட்ட வரையில் தெளிவானதொரு வளர்ச்சி நிலை எய்தப்படவில்லை."4 இந்த நிலைமையை பெண்சமத்துவம், பெண்கல்வி, பெண்எழுச்சி, பெண்ணுரிமை என முழங்கப்பெறும் இருபதாம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளிலும் ஒரு பெண் குழந்தைக்கு தகப்பனே முதன்மைபெற்றவன் என்ற மாறா மனப்போக்கைச் சித்திரிக்கிறார். வேதம் காட்டும் பெண் சிறப்பை முன்மொழிந்தாலும்கூட, வருணப் பாகுபாட்டில் நான்காம் வருணத்தவரையும் பெண்களையும் இணைக்கும் நிலையை 'சூத்திரர் யாவர்? என்ற நூலின் வழி அம்பேத்கர் விளக்குமாற்றை 'காப்பாளரும் கைவிடப்பட்ட கற்பரசிகளும்' என்னும் தலைப்பின் கீழமைந்துள்ள கட்டுரையில் மொழிந்திருக்கிறார்.

## முடிவுரை

இவ்வாறு வரதட்சணைக்கொடுமைகள், குரூரக் கற்பழிப்புகள், ஒடுக்கப்பட்டது என்று நினைத்திருந்த 'சதி' என்னும் உடன்கட்டை ஏறுதலின் மீட்சிகள், பெண்சிசுக்கொலைகள், பெண்கருவழிப்புகள் எல்லாம், வளர்ந்து வருகின்ற பெண்ணின் சீரிய எழுச்சிகளைத் தடுத்து அடக்குபவை. காலம்தோறும் ஆதிக்கம் செலுத்தி வரும் சக்திகளான அவை, சமயப்போர்வைப் போர்த்தியிருந்தாலும் சாத்திரப் போர்வைப் போர்த்தியிருந்தாலும் ஒரு நாள் கிழித்தெறியப்பட வேண்டும் என்பதையே எழுத்தாளர் கனத்த குரலில் உரைத்திருக்கிறார்.பெண்கள் தங்களைச் சக்தி உள்ளவர்களாக உருவாக்கிக்கொள்ளவும், தங்களின் திறமை வெளிப்பாடுகளை இன்னதென இனம்காட்டவும் முன்வருவதன் அவசியத்தைத் தமது துப்புத் துலக்கிய தேடலில் கிடைத்த தடயங்களின் வழி இராஜம் கிருஷ்ணனின் பெண் சமுதாயம் வளர்ச்சியுற போராடி நிறுவமுயன்றிருக்கிற முறைமையினை இக்கட்டுரையின் வழியாக அறிந்துகொள்ளலாம்.

## References

Annie Thomas, Tamil Nadu Womens studies

T. Gnanasekaren, Pen valakarugal

R. Vijayalakshmi, Tamilaga Makalir

Vasuki Jayarathnam, Feminist Traces

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License